## "மிகுந்த கனிகள்"

Praise the Lord:

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. (1 தீமோத்தேயு 2:5)
**அந்த மத்தியஸ்தர் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே உங்களனைவரையும் வாழ்த்துகிறேன்.**

**கொலோசெயர் / Colossians 1:19-20 (பக்கம் 275)**

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,
கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,
பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.

:**என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்;**
**உலகம் கொடுக்கிறபிரகாரம் அல்ல**....... யோவான் 14:27

இந்த தெய்வீக சமாதானத்திற்கு நிகர் வேறு எதுவும் இல்லை:
இந்த தெய்வீக சமாதானம் நமமிடத்தில் இருந்தால்,
எல்லாவித சூழ்நிலைகளிலும் மனரம்மியமாக நாம் வாழமுடியும். ஆமென்.
கிறிஸ்து சிலுவையிலே சிந்திய இரத்தத்தினாலே உண்டான
இந்த விசேஷித்த தெய்வீக சமாதானத்தைப் பெற்ற நாம், தேவனுக்கு என்ன செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த விசேஷித்த ஜெப நாட்களிலே தியானிப்போம்

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். (1தீமோத்தேயு/1 Timothy 2:4)
தேவசித்தப்படி நாம் இரட்சிக்கப்பட்டோம்....
கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;
இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; (எபேசியர் 2:8)

இப்படி கிருபையினால் கிடைத்த இரட்சிப்பின் நோக்கம்:

.....நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர்/Ephesians 2:10)

தேவனின் ஆயத்தப்படி நாம் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு,
தேவபெலனை நமக்கு கொடுத்திருக்கிறார்.

**1 கொரிந்தியர்/1 Corinthians 1:18 (பக்கம் 227)**

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது,
இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.
சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது என்று சொல்லி அவர்களை நாம் அப்படியே விட்டுவிடமுடியாது.
...ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. (மத்.18:14)
......ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9)

**சிலுவையிலே கிறிஸ்து சிந்தின இரத்தத்தினாலே உண்டான தெய்வீக சமாதானமும்,**
**சிலுவை உபதேசத்தினாலே நமக்கு கிடைத்துள்ள தேவபெலனும் நம்மிடத்திலே வளருமானால்,**
தேவனுக்குச் சித்தமான விருப்பத்தை செய்ய வாஞ்சை நம்மிடத்திலே வளரும்.
கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; (2 கொரிந்தியர் 5:14)
சுவிசேஷம் என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது;
சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. (1 கொரிந்தியர்/1 Corinthians 9:16)

**என்ற உணர்வுடன் கூடிய தெய்வீக சிந்தை சகோதர சகோதரிகளாக**
**ஒன்றுகூடியிருக்கும் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்ள**
**ஆண்டவர் உதவிசெய்வாராக. ஆமென்**

__யோவான்  / John 15:5 (பக்கம்  150)__

**நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் __மிகுந்த கனிகளைக் கொடுப்பான்__; என்னையல்லாமல் உங்களால் __ஒன்றும் செய்யக்கூடாது__.**

- ❖ **மிகுந்த கனிகளைக் கொடுப்பது – ஒரு நிலமை**
- ❖ **ஒன்றும் செய்யக்கூடாது என்ற சூழ்நிலை மற்றொரு நிலமை**
- ❖ **நமது நிலமையை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்………………..**

கிறிஸ்துவின் அன்பினாலே **மிகவும்** நெருக்கி ஏவப்பட்டவர்கள்,
கிறிஸ்துவை அறியாத மக்கள் உள்ள நாடுகளுக்கு
கடந்து சென்று, தம்மையே அர்ப்பணிக்கிறார்கள்.

நாம் வாழும் Toronto நகரத்திலேயே, கிறிஸ்துவை அறியாத
__பல நாட்டு மக்களையும்__, கர்த்தர் கொண்டு வந்து வாழச் செய்திருக்கிறார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், **ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால்,**
**அவன் __மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;__**
என்ற வசனத்தை மீண்டும் மீண்டும் தியானித்துப் பாருங்கள்….

__**நான் கிறிஸ்துவிலும் கிறிஸ்து என்னிலும் நிலைத்திருந்து,…..**__

என்ற வசனம் என்னிலே நாளுக்கு நாள் வளரும்போது…….
எனது நற்கிரியைகள் எந்த அளவில் உள்ளன என்று நான் சிந்தித்துப் பார்த்தால்,
**எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது;**
**நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று**
**பரிசுத்தஆவிக்குள் என்மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது.** (ரோமர் 9:1-2) (பக்கம் 217)
**இந்த வசனம் என்னை ஆட்கொண்டு நெருக்குகிறது. ஒவ்வொரு நாளும் என்னைக் கொள்ளுகிறது.**
**கர்த்தருடைய தெய்வீக சமாதானம் என்னை மன்னித்து ஒவ்வொரு நாளும் உயிர்ப்பித்து,**
**இம்மட்டும் வழிநடத்துவதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.**

__*ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலை?*__

**நமது சிந்தனைகளை நமது தனித்தன்மைக்கு ஏற்ப,**
**கட்டுப்படுத்தும்போதுதான் நாம் திருப்தியடைகிறோம்.**
**திருப்தியடைவது __இந்த உலக வாழ்விற்கு__ தேவையான ஒன்று.**
**இதைத்தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம்.**

**ஆன்மீக வாழ்க்கையில் இப்படி திருப்தியடைவது பரிபூரணத்தைக் கொடுக்காது.**
இதனால்தான் நான் மிகுந்த கனிகளைக் கொடுக்க இயலாமல் இருக்கிறேன்.
இதை வேதம் அருமையாக சொல்கிறது.

மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. (கலாத்தியர்/Galatians 5:17) (பக்கம் 262)
வீட்டிலே தனித்திருந்து உங்களுடைய சகல சூழ்நிலைகளையும் அமைதியாக அமர்ந்திருந்து, ஜெபித்து சிந்தித்துப் பர்ருங்கள். கர்த்தர் உங்களுக்கு உணர்த்துவார்.

__*இந்த சூழ்நிலையை எப்படி மேற்கொள்வது?*__

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா 5:24) (பக்கம் 262)
கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கும் கிறிஸ்துவுக்குள் வளர்வதற்கும் வித்தியாசம் உண்டு.
ஜெபித்து சிந்தித்துப் பாருங்கள்.

- ✓ ***உங்கள் தனிப்பட்ட தியானத்திற்கு:***
- ✓ கிறிஸ்து **சிலுவையிலே** சிந்திய இரத்தத்தினாலே பெற்ற **தெய்வீக சமாதானம்.....**
- ✓ கிறிஸ்து **சிலுவை உபதேசத்தின்** மூலமாக பெற்ற **தேவபெலன்.....** ***பெற்ற நான்....***
- ➢ எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்ற **தேவனுடைய விருப்பமும்**
- ➢ அந்த விருப்பத்திற்காக **எனக்குக்** கிடைத்த **கிறிஸ்துவின் அன்பும்**.....
- ➢ **என்னை நெருக்கி ஏவுமானால்,**
- ❖ சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், **எனக்கு** ஐயோ. என்பதை **உணர்வேன்**.
- ❖ இந்த உணர்வுக்கு தடையாக உள்ள மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் **சிலுவையில்** அறைந்துவிட்டு விடுபட கிறிஸ்துவுக்குள் **பிரயாசப்படுவேன்.**
- ❖ அப்பொழுது....
    - ❖ **நான் கிறிஸ்துவிலும் கிறிஸ்து என்னிலும் நிலைத்திருந்து,**
    - ❖ **நான் மிகுந்த கனிகளைக் கொடுப்பேன்;**

**என்ற உணர்வு நம்மிலே வளர கர்த்தர் கிருபை செய்வாராக......**

"மனந்திரும்புகிற ஒரேபாவியினிமித்தம் பரலோகத்தில் **மிகுந்த சந்தோஷம்** உண்டாயிருக்கும்" (லூக்கா 15:7)

"கிறிஸ்துவை அறியாமலும், அறிய விரும்பாமலும் இருக்கிறவர்களை குறித்து...

**"எனக்கு மிகுந்த துக்கமும்** இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது;" (ரோமர் 9:1)

**மிகுந்த சந்தோஷம்...... மிகுந்த துக்கம்....... இந்த இரண்டு வேத வசனங்களையும் சேர்த்து**

இந்த விசேட லெந்து நாட்களிலே உங்கள் அன்றாட ஜெபத்திற்குப் பிறகு,
சிறிது நேரம் தனித்திருந்து சிந்தித்துப் பாருங்கள்.
யோசனையில் பெரியவரும் ஆலோசனையில் ஆச்சரியமுமான நம் ஆண்டவர்
அநேக கருத்துக்களை உங்களுக்கு உணர்த்துவார். ஆமென்
நம்முடைய ஜெபம், சிந்தனை, செயல்கள்
நானும் என் தேவனும் என்ற ஐக்கியத்துக்குள்ளாக வளர கர்த்தர் நம் ஒவ்வொருவரையும்
ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக. ஆமென்.